

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் சி மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். இக்கூட்டத்தில் தேர்தல் பொறுப்பாளர்கள் சேலம் முன்னாள் மேயர் ரேகா பிரியதர்ஷினி, முனைவர் ஜான், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பொன்னுசாமி, பெ.இராமலிங்கம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலம் வருகையையொட்டி, விழா நடைபெறும் சேலம் மாவட்டம், இரும்பாலை, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று முன்தினம் (03.06.2025) ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாநகராட்சி மேயர்ஆ. இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் மா.இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, காவல் துணை ஆணையர் வேல்முருகன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு கிழக்கு - மேற்கு நகர தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி-நளினி சுரேஷ்பாபு மாலை அணிவித்து மரியாதை!

நாமக்கல், ஜூன் 5 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை ஒட்டி நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு கிழக்கு மற்றும் மேற்கு நகர திமுக சார்பில் அண்ணா சிலை அருகே முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு தி.மு.க.வினர் மலர் தூவி மரியாதை எழுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு மேற்கு நகர கழக செயலாளர் ஆர்.நடேசன், கிழக்கு நகர செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான தா.கார்த்திகேயன் ஆகியோர் தலைமை தாங்கினர். நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு முன்னிலை வகித்தார்.

நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து விசாகன் மருத்துவ மனையில் பொது மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்.

முகாமில் மூட்டு வலி எலும்பு பிரச்சினை சர்க்கரை நோய் பொது மருத்துவம் உள்ளிட்ட பிரிவுகளில் சிகிச்சை பெற்றனர். விசாகன் மருத்துவமனை தலைமை மருத்துவர் ரித்திஷ் தலைமையில் மருத்துவர்கள் செவிலியர்கள் என பலரும் முகாமில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு சிகிச்சை அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் வட்டூர் தங்கவேல், தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் தாமரைச்செல்வன் மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர் சேரன் சக்திவேல், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ், முன்னாள் மாவட்ட அவை தலைவர் தாண்டவன், நகர இளைஞரணி செங்கோட்டுவேல், நகர் மன்ற உறுப்பினர்கள் மகேஸ்வரி, செல்வி ராஜவேல், புவனேஸ்வரி உலகநாதன், சினேகா ஹரிகரன், டி என் ரமேஷ், ராஜா, நகர மகளிர் அணி செயலாளர் கண்ணாம்பாள், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ராஜவேல் ஆகியோர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நகர ஒன்றிய தி.மு.க.வினர் கலந்து கொண்டு உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான "செம்மொழி நாளை" முன்னிட்டு 1968 முதல் 1972 காலகட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் "நீரார் அணைக்கு" எதிர்ப்புறம் மலையைக் குடைந்து அந்த தண்ணீரை சோலையாறு அணைக்கு கொண்டு செல்ல திட்டம் உருவாக்கிய தலைவர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் வகையில் கோவை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் காடம்பாறை அணை பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் சௌ.சர்வோதயன் ஏற்பட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் பல்லவராயன்பேட்டை சுபாஷ்சந்திரபோஸ் உண்டு உறைவிடப்பள்ளியில் உள்ள மாணவர்கள் 104 பேருக்கு உடை மற்றும் கல்வி உபகரணங்களை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன், மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான.இமையநாதன், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.கபிலன், மயிலாடுதுறை இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, துணை அமைப்பாளர் சௌ.சர்வோதயன் ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அவர்களின் திருஉருவ சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தரசான், க.இராஜேந்திரன், மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சிக்கல் என்.ஆனந்த், கே.பழனியப்பன், உதயம் வே. முருகையன், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள். சார்பு அணி நிர்வாகிகள் உள்ளனர்.

### மண்ணின் மைந்தர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# திருவாரூர் மக்கள் கூடி நடத்திய பிரமாண்ட ஊர்வலம்!

## பூண்டி கே.கலைவாணன் தலைமையில் பெருந்திரளானோர் பங்கேற்றனர்!

திருவாரூர், ஜூன் 5 -

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதல்களோடு திருவாரூர் மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டத்தை உருவாக்கி மாவட்டத்தின் அனைத்து தேவைகளையும் தந்த அந்த மகத்தான தலைவருக்கு திருவாரூர் மக்கள் பெருந்திரளாக திரண்டுவந்து பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் சிறப்பு ஊர்வலம் நடத்தி கலைஞரின் புகழ்பாடினர்.

திருவாரூர் மாவட்டத்தின் திருவாரூர், கொரடாச்சேரி, மன்னார்குடி, கோட்டூர், திருத்துறைப் பூண்டி, முத்துப்பேட்டை, குடவாசல், நன்னிலம், வலங்கைமான், நீடாமங்கலம், கூத்தாநல்லூர் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளிலும்,அனைத்து வார்டு மற்றும் கிளைக்கழக கங்களிலும் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

திருவாரூர் மாவட்டத்தை உருவாக்கி, திரு.வி.க. கல்லூரி முதல் மத்திய பல்கலை கழகம், ஓடாத தேரை மீண்டும் ஓடவைத்த பெருமை, தேரோடு வீதியெங்கும் கான்க்ரீட் சாலை, புதைவட மின்பதை, பிரமாண்ட மாவட்ட ஆட்சியர் வளாகம், மருத்துவக்கல்லூரி,ஒருங்கிணைந்த நீதிமன்றம் என தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித்தந்த கலைஞர் என்கிற அந்த மகத்தான மனிதருக்கு நன்றி செலுத்துகின்ற வகையில், திருவாரூர் மாவட்டம் முழுவதிலும் இருந்து திரண்டு வந்திருந்த ஆயிரக்கணக்கனோர், பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பெரியார் சிலையில் இருந்து ஊர்வலமாக கலைஞரின் புகழை முழக்கங்களாக சொல்லியபடி சென்றனர்.

மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற இந்த பிரமாண்ட ஊர்வலத்தில் பொதுமக்கள், வர்த்தகர்கள், சமூக அமைப்புக்களின் நிர்வாகிகள், அனைத்து சமுதாய பிரதிநிதிகள், மாணவ மாணவிகள்,இளைஞர்கள் , ஏராளமான பெண்கள் , கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் என பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

ஊர்வலம் பழைய பேருந்து நிலையத்தில் தொடங்கி, பிரதான சாலைகள் வழியே கலைஞர் அவர்களின் கீழவீதி இல்லத்திற்கு வந்து அங்கு வைக்கப்பட்டிருந்த அவரது திரு உருவப்படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டது. ஊர்வலத்தில் பெங்கேற்ற அனைவரையும் திருவாரூர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் வரவேற்று நன்றி தெரிவித்தனர்.

முன்னதாக காட்டூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற கலைஞர் பிறந்தநாள் நிகழ்வில் கலைஞர் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டு, ஏழை எளிய மக்களுக்கான நலத்திட்டங்களை மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

# அரியலூரில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

## நல உதவிகளை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், ஜூன் 5 -

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அரியலூர் மாவட்டம் தந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வாயிலில் அலங்கரித்து வைக்கப்பட்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்

பொதுமக்கள், குழந்தை செல்வங்களுடன் கேக் வெட்டி தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோருடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து சுமார் 2 கிலோ மீட்டர் ஊர்வலமாக சென்று புறவழிச் சாலையில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் இல்லத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஊர்வலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அரியலூர், ஜெயங்கொண்டம், செந்துறை, ஆண்டிமடம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கும், வெண்கலச் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்தும், மரியாதை செலுத்தியும், பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் சி.சந்திர சேகரன், லதா பாலு, ஒன்றிய பொறுப்பாளர்கள்

இரா. கென்னடி, பூ.செல்வராசு, கோ.அறிவழகன், மா.அன்பழகன், அசோகசக்ரவர்த்தி , வி.எழில் மாறன், தனவேல், இரா.அண்ணாதுரை, கே.ஜி.எஸ்.முருகன், தெய்வ.இளையராஜா, பொன்.செல்வம், அரியலூர் நகர செயலாளர் இரா.முருகேசன், நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், பொதுக் குழு உறுப்பினர்கள் இரா.பாலு, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட அமைப்பாளர்கள் ஜெயகுமார், அருண் ராஜா, மீனாசாமி நாதன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டம், டி.என். பாளையம் வடக்கு ஒன்றியம், கள்ளிப்பட்டியில் அமைந்துள்ள கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.சுப்பிரமணியம், ஒன்றியக் கழக செயலாளர்கள் வடக்கு எம்.சிவபாலன், தெற்கு ஜம்பு (எ) கே.கே.சண்முகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம்,நத்தஹள்ளியில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி தலைமையில் நல்லம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் என்.பி.பெரியண்ணன் ஏற்பாட்டில் செம்மொழிநாளாம் ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளை யொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி,பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதேபோல் பாலஜெங்கமனஹள்ளி, நாகர்கூடல், சாமிசெட்டிப்பட்டி பகுதிகளில் இனிப்பு மற்றும் உணவு வழங்கப்பட்டது.ஏலகிரி ஒன்றிய துவக்க பள்ளியில் மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டது.நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ சுப்ரமணி, மாவட்ட நிர்வாகிகள் செல்வராஜ்,வே.தங்கமணி,மற்றும் எம்.பி.கௌதம், இளையசங்கர், சூர்யா, என்ஜி.ஓ.சரவணன் உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.